மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உதகமண்டலம்

படிவம் 4

தலைமறைவு எதிரி பற்றிய விளம்புகை

(பிரிவு 82)

அமர் வு வழக்கு எண் 50 /2017

நாள் 18.07.2024

பிரபு என்கிற சலீம்

த/பெ. கிருணப்பா

ஐயப்பன் காலனி,

கரன்சி பஜார் , குன்னூர் .....1 ம் எதிரி

இந்த நீதிமன்றத்தில் மேற்கண்ட முதல் எதிரியின் மீது அமர்வு வழக்கு எண்.50/2017-ல் மேல் குன்னூர் காவல் நிலைய குற்ற எண் 37/2016 பிரிவுகள் 397, 489(A), 489(B), 489(C), 489(D) 489 (R) இதச-வின் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு அந்த வழக்கில் 1ம் எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நிலுவையில் இருக்கும் போது நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் அவர் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டு அந்த பிடியாணையை நிறைவேற்றுவதில் இருந்து 1ம் எதிரியாகிய பிரபு என்கிற சலீம் த/பெ. கிருணப்பா தம்மை மறைத்துக்கொண்டும், தலைமறைவாக இருக்கிறார் என்றும் நம்பத்தகுந்த காரணங்கள் இருப்பதாக இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் ஏற்கனவே குவிமுச பிரிவு 82ன் கீழான ஆஜராக கோரும் பகிரங்க அறிவிப்பு 05.01.2024ம் தேதியன்று பிரேரணை செய்யப்பட்டு அதனடிப்படையில் 09.02.2024ம் தேதி இந்த நீதிமன்றத்தில் விசாரணைக்காக ஆஜராக உத்தரவிடப்பட்டு இருந்தும், இதுநாள்வரை 1ம் எதிரி ஆஜராகாததால் குவிமுச 82 பிரிவின்கீழ் 1ம் எதிரி பிரபு என்கிற சலீம், த/பெ. கிருணப்பா, ஐயப்பன் காலனி, கரன்சி பஜார் ,

குன்னூர் என்பவர் அமர்வு வழக்கு எண் 50/2017 மேல் குன்னூர் காவல் நிலைய குற்றஎண் 37/2016 பிரிவுகள் 397, 489(A), 489(B) , 489(C), 489(D) 489 (R) இதச என்ற வழக்கில் தலைமறைவு எதிரி என்று அறிவிக்கப்படுகிறது.

அமர்வு நீதிபதி,
உதகமண்டலம்

நகல்:-

1, நீதிமன்ற அறிவிப்பு பலகை, உதகமண்டலம்

2. காவல் ஆய்வாளர், மேல் குன்னூர், காவல் நிலையம்.

3. காவல் கண்காணிப்பாளர், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.

4, மாவட்ட ஆட்சியர், உதகமண்டலம்

5. அரசு வழக்கறிஞர், உதகமண்டலம்.